# எறும்பும் நானும்



# எறும்பே! எறும்பே! எங்கே போறீங்க?



எந்த வீட்ல இனிப்பு இருக்குன்னு
பாக்கப்போறேங்க!

# பாத்து நீங்க என்ன செய்வீங்க?



பதமா நானும் சேத்து வைப்பேங்க!

# சேத்து வைச்ச சீனியெல்லாம் என்ன செய்வீங்க?



சேர்ந்தார்க்கெல்லாம் கொடுக்கப்போறேங்க!

# நல்ல செய்தி சொன்னீங்க
# நானும் தானே சேமிப்பேன்
# நல்லவர்க்கெல்லாம் கொடுப்பேன்!

